# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் (2017–2018)

1. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பான வங்கி சேவை வழங்கும் பொருட்டு, தற்போது 44 கிளைகளுடன் தமிழகம் முழுவதும் செயல்பட்டு வரும் தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கிக்கு மேலும் 3 புதிய கிளைகள் மொத்தம் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் தாம்பரம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நிறுவப்படும். இச்செலவினம் இக்கூட்டுறவு வங்கியின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

2. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியினை பரவலாக்குவதற்கும், மின் ஆளுமை, பொருட்கள் மற்றும் சேவை வரி சட்டத்தின் சாதக பாதகங்களை இத்துறையின் அலுவலர் மற்றும் பணியாளர்கள் அறிந்து கொள்ளும் வகையிலான புத்தாக்கப் பயிற்சி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி வழங்கப்படும்.

3. 02.12.2016 நாளிட்ட இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு ஆணையத்தின் வரைவு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மரவள்ளி கிழங்கு மாவின் தரத்தின் மீதான 9 புதிய பரிசோதனை விதிகளை நடைமுறைப்படுத்திடும் பொருட்டு இவ்வாய்வகத்திற்கு “லோவிபான்ட்” மற்றும் “பைபர்டெக்” ஆகிய புதிய உபகரணங்கள் ரூ.17.50 இலட்சம் மதிப்பீட்டில் **மாண்புமிகு முதலமைச்சர்**

**அவர்களின் ஆணைப்படி** கொள்முதல் செய்து நிறுவப்படும். இச்செலவினம் சேகோசர்வ் நிதியிலிருந்து இருந்து மேற்கொள்ளப்படும்.

4. சேலம் கிரானைட் மற்றும் பொதுத் தொழிற்பேட்டையானது 50 உறுப்பினர்களுடன் 20.36 ஏக்கர் பரப்பளவில் 20.12.1993 அன்று பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. இத்தொழிற்பேட்டையின் சாலை மற்றும் வடிகால் வசதிகள் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு **முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** மேம்படுத்தப்படும்.

5. தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கியில் 200க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களில் பெரும்பான்மையினர் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதால், மாறிவரும் பொருளாதார சூழ்நிலைக்கேற்ற வங்கியியல் பயிற்சி அவசியமாகிறது. பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளுக்கு இணையாக செயல்பட **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** இவ் வங்கி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தரமான பயிற்சி நிலையம் மூலமாக பயிற்சி வழங்கப்படும். இச்செலவினம் இக்கூட்டுறவு வங்கியின் நிதியில் இருந்து மேற்கொள்ளப்படும்.

6. சேகோசர்வ் சங்க உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் சவ்வரிசி மற்றும் மரவள்ளி கிழங்கு மாவு பொருட்கள் பாரம்பரிய ஏல முறைப்படி விற்பனை செய்யப்படுகிறது. ஏல முறையின் வெளிப்படைத் தன்மையினை உறுதிசெய்யும் பொருட்டு இச்சங்கத்தில் மின்னனு ஏல மையம் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நிறுவப்படும். இச்செலவினம் சேகோசர்வ் நிதியில் இருந்து மேற்கொள்ளப்படும்.

7. கல்லூரிகள், பல்தொழில் நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சி மையம் போன்ற உயர்கல்வி நிலையங்களில் தொழில் முனைவு மற்றும்

புதிய கண்டுபிடிப்பு முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் வாத்வானி அறக்கட்டளை – தேசிய தொழில் முனைவு பிணையம் உதவியுடன் 2016–17 ஆம் ஆண்டு முதல் புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில் முனைவு வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி ஹப் மற்றும் ஸ்போக்ஸ் மாதிரியில் முன்னோடிக் கல்வி நிறுவனங்கள் பிராந்திய மையங்களாக தெரிவு செய்யப்பட்டு அந்தந்தப் பகுதியிலுள்ள 20–25 கல்லூரிகளை ஒருங்கிணைத்து அங்கு பயிலும் மாணவர்கள் / முன்னாள் மாணவ தொழில் முனைவோர்களுக்கு புதிய தொழில் முனைய உரிய ஒத்துழைப்பு நல்கும். 2016–17 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் 170 கல்லூரிகள் தங்களை இணைத்துள்ளன. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** இவ்வாண்டு, மேலும் 100 கல்லூரிகளுக்கு, இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.